கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2026ம் வருடம் மார்ச் மாதம் 11ம் நாள் புதன்கிழமை
இடைநிலை மனு எண்.3/2025
இன்
அசல் வழக்கு எண்.9/2016
----

செல்வம் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1) பாண்டி
2) மாவட்ட ஆட்சியர், மதுரை
3) தாசில்தார், திருமங்கலம்.
... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனுவானது 07.03.2026ல் இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.மாதவன் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை

பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்/வாதியால் அசல் வழக்கின் வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டி கட்டளை 6 விதி 17ன் மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுவின் சுருக்கம்:–

1.1) அசல் வழக்கானது கடந்த 2016ம் ஆண்டு பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக் கோரியும், தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை 1ம் பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 1ம் பிரதிவாதியின் தந்தை முத்தையாதேவர் பெயரில் உள்ள வருவாய் ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்யக்கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில், அசல் வழக்கில் வழக்குரை தாக்கல்

செய்யப்பட்டபோது, வழக்கு சொத்து குறைவாக தவறுதலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்குரையில் சில விவரங்கள் சேர்க்காமல் விடுபட்டுள்ளது என்றும், விடுபட்ட விவரங்களை சேர்க்க வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டும் என்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்து இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**3) தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

இருதரப்பு வாதுரைக்கும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

3.1) வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில், வழக்குரையில் 1வது அயிட்ட சொத்திற்கு தவறுதலாக மதிப்பீடு செய்யப்பட்டு, குறைவான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என நீதிமன்றம் மூலம் மனுதாரர் வழக்கறிஞருக்கு 07.11.2025ம் தேதி நோட்டீஸ் அனுப்பட்டு, அதன்படி

வாதி ரூ.22,574.50/- நீதிமன்றக்கட்டணம் செலுத்தி விட்டார் என்றும், அதனை வழக்குரையில் சரிசெய்யும்விதமாக மேற்படி சீர்திருத்தங்கள் உள்ளது என்று மனுதாரர்/வாதி தரப்பில் கூறும் வாதத்தை ஏற்றும், வழக்கு சொத்தானது உரிய முறையில் மதிப்பிட வேண்டியது மற்றும் உரிய முத்திரை கட்டணம் செலுத்துவது சட்டப்படியானது என்றும், அதனையொட்டி சீர்திருத்த விபரமானது சட்டப்படியானது என்பதை கருத்தில் கொண்டும், அசல் வழக்கானது வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், மேற்படி வழக்குத்தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை முழுமையாக தீர்வு காண்பதற்கு மேற்படி சீர்திருத்தங்கள் அவசியமானதாக உள்ளது என்பதை கருத்தில்கொண்டும், இம்மனுவினை அனுமதிப்பதால் தரப்பினர்களுக்கு இடையே மீண்டும் ஒரு வழக்கு தாக்கல் செய்வதை தவிர்க்கும்விதமாகவும் இருப்பதால், நீதியின் நலன்கருதி மேற்படி சீர்திருத்தமானது அவசியமானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் இம்மனுவானது அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 11ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.11 16:38:36 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

**இணைப்பு:**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.11 16:38:42 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.3/2025
இன்
அசல் வழக்கு எண்.9/2016
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 11.03.2026